2. அவையுரிமைக் கேள்விகள்

(அ) "நாத்திகம்" நாளிதழில் வெளிவந்த செய்தி குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு உறுப்பினர் திரு எம். சுரேந்திரன் அவர்கள் ஓர் அவை உரிமைப் பிரச்சினையை எழுப்பியிருக்கிறார்கள். 8—4—70 நாளிட்ட "நாத்திகம்" என்ற பத்திரிகையில், "தி.மு.க. எம்.எல்.ஏ. ஒருவர் அரசாங்கத்திற்குச் சொந்தமான புறம்போக்கு நிலத்தை விலை பேசி விற்றதாக, சென்ற சட்டமன்றத் தொடரில் சட்டமன்ற உறுப்பினர் ராமச்சந்திரதுரை ஆதாரத்தோடு குற்றஞ்சாட்டினார். அதுபற்றி சபாநாயகர் "ரூலிங்" தருவார் என்று அன்று கூறப்பட்டது. தி.மு.க. ஆட்சியே! சபாநாயகரின் "ரூலிங்" இன்றுவரை வரவில்லையே, அதன் காரணம் என்ன?" என்று எழுதியிருக்கிறது. சபாநாயகர் மீது குற்றம் சாட்டும் முறையில் இருப்பதால், இதை உரிமைக் குழுவுக்கு அனுப்ப வேண்டும் என்று எழுதியிருக்கிறார். இதுபற்றி பேரவையின் இன்னொரு கூட்டத்தில் எடுத்துக் கூறுகிறேன். முற்பகல்—10-00-மணி

(ஆ) மாநிலங்கள் அவைத் தேர்தலிலே இரண்டு வாக்குகள் செல்லாதவை ஆகியது பற்றிய திரு. டி. மார்ட்டின் அவர்கள் பேச்சு குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. எஸ். அக்கிராஜு அவர்கள் ஓர் உரிமைப் பிரச்சினையை எழுப்பியிருக்கிறார்கள். அதன் மீது இன்று தீர்ப்பளிப்பதாகக் கூறியிருந்தேன். 31—3—70 அன்று திரு மார்ட்டின் அவர்கள் பேசுகின்றபோது, மாநிலங்கள் அவைத் தேர்தலிலே இரண்டு வோட்டுகள் செல்லாத வோட்டுகளாகிவிட்டன என்று குறிப்பிட்டார்கள். இரண்டு வாக்குச் சீட்டுக்கள் செல்லாதனவாகியுள்ளன என்பது உண்மையாதலாலும், எந்த ஓர் உறுப்பினர் பெயரும் சுட்டிக்காட்டப்படவில்லை ஆதலாலும், அவ்வாறு கூறியதில், எந்தவிதமான உரிமையும் மீறப்படவில்லை. ஆகவே, இதற்கு அனுமதி மறுக்கப்படுகிறது.

(இ) மாண்புமிகு அமைச்சர் திரு. மாதவன் அவர்கள் உண்மைக்கு மாறான தகவலைத் தந்தார் என்று கூறப்படுவது குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு உறுப்பினர் திரு. சித்தன் அவர்கள், மாண்புமிகு தொழில் அமைச்சர் மீது ஒரு உரிமைப் பிரச்சினையைக் கிளப்பியிருக்கிறார்கள். 28—3—70 அன்று தான் பேசும்போது, குறுக்கிட்டு, மாண்புமிகு தொழில் அமைச்சர் தன்னுடைய கூற்றை மறுத்துப் பேசுகையில் சட்ட அமைச்சர், தனிப்பட்டவர்களும் நில ஆர்ஜிதம் செய்கிறார்கள், நில ஆர்ஜிதம் செய்வதற்குச் சட்டப்படி எந்த விதமான தடையும் இல்லை, ஆட்சேபணையும் இல்லை, சர்க்காருக்கும், இதற்கும் எந்தவிதமான சம்பந்தமும் இல்லை, கொடுப்பவர்களும் வாங்குபவர்களும் சம்மதப்பட்டால் அரசாங்கம் எதுவும் செய்ய முடியாது என்று சொன்னது உண்மைக்கு மாறானது, விதிகளுக்கு (நில ஆர்ஜித விதிகள்) புறம்பானது என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். மாண்புமிகு தொழில் அமைச்சர் கூறியிருப்பது எந்த விதிகளுக்கும் முரண்பட்டதாகவோ மீறியதாகவோ தோன்றவில்லை. ஆகவே, உரிமை எதுவும் மீறப்படவில்லை இதற்கும் அனுமதி தர மறுக்கிறேன்.

(ஈ) பேரவைத் தலைவரால் பேரவை நடவடிக்கைக் குறிப்பிலிருந்து நீக்கப்பட வேண்டுமென ஆணையிடப்பட்ட பகுதிகளை "நவசக்தி" நாளிதழ் வெளியிட்டது குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு உறுப்பினர் திரு. கோ. பூவராகன் அவர்கள் 6—4—70 அன்று இப்பேரவையில் அவை உரிமைக் கேள்வி ஒன்றை எழுப்பினார்கள். 4—4—70 அன்று நடந்த பேரவைக் கூட்டத்தில் மாண்புமிகு உறுப்பினர் திரு. கரு. சீமைச்சாமி அவர்கள் பேசிய பேச்சில் ஒரு பகுதியை பேரவை நடவடிக்கைக் குறிப்பில் இருந்து நீக்கிவிடும்படியும், அப்பகுதி பத்திரிகைகளில் வெளியிடப்படக் கூடாது என்றும் நான் அன்றே இப்பேரவையில் அறிவித்திருந்தும் 5—4—70

தேதியிட்ட "நவசக்தி" நாளிதழில் அப்பகுதி வெளியிடப்பட்டிருப்பதாக அவர்கள் கூறியிருக்கிறார்கள். இப்பேரவையின் நடவடிக்கைக் குறிப்பில் இருந்து நீக்கப்பட வேண்டும் என்று குறிப்பிடப்பட்டுள்ள பகுதிகளை வெளியிடுவது இந்த அவையின் உரிமையை மீறிய செயலாகும். எனவே அது பற்றி விசாரித்து இந்த அவைக்கு அறிக்கை கொடுக்கும்படி, நான் இதை இப்பேரவையின் 192-வது விதிப்படி அவையுரிமைக் குழுவிற்கு அனுப்புகிறேன்.

(உ) திரு. என். எஸ். வி. சித்தன் மாண்புகு தொழில் அமைச்சரின் நிலம் ஆர்ஜிதம் செய்யப்பட்டது பற்றி சாட்டிய குற்றச்சாட்டு குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : 28—3—70 அன்று நடைபெற்ற இறுதித் துணைமானியக் கோரிக்கை விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றிய திரு என். எஸ். வி. சித்தன் அவர்கள், மாண்புமிகு தொழில் அமைச்சர் அவர்கள் இந்த அவைக்கு அளித்திருக்கும் சொத்துக் கணக்கு பற்றிக் குறிப்பிடும்போது, "31—3—67" முடிய என்ற தலைப்பின் கீழ் "புஞ்சை ஏக்கர் மனையிடங்கள் 5" என்று போட்டு, 5 ஏக்கருக்கு ரூ. 5,000 மதிப்பு கொடுத்திருக்கிறார்கள். பின்னால் "31—3—1968 முடிய" என்ற தலைப்பின்கீழ் 31—3—67-ல் உள்ள அதே சொத்து விவரக் கணக்கைக் கொடுத்திருக்கிறார்கள். "31—3—69 முடிய" என்ற தலைப்பின்கீழ் "புஞ்சை ஏக்கர் மனையிடங்கள் 3, மதிப்பு ரூ. 3,000" என்று கொடுத்திருக்கிறார்கள். 1967, 1968-ல் கொடுத்ததை விட இரண்டு ஏக்கர்கள் குறைத்திருக்கிறார்கள். கடைசியில் பின்னாலே உள்ள குறிப்பில் "சிங்கம்புணரியில் புஞ்சை நிலம் மனையிடமாக 1·54 ஏக்கர் நில ஆர்ஜிதத்தில் எடுத்துக் கொண்டு தரப்பட்ட தொகை ரூ. 34,000" என்று கொடுத்திருக்கிறார்கள். முதல் ஆண்டுகளில் கொடுக்கப்பட்ட விவரம் 5 ஏக்கர், ரூ. 5,000 மதிப்பு, அதிலே 1·54 ஏக்கருக்கு ரூ. 34,000 தரப்பட்டிருக்கிறது. அமைச்சர் அவர்கள் இது பற்றி விளக்கம் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இதுபற்றி வெளியிலே பரவலாகப் பேசப்படுகிறது. அமைச்சராக இருக்கிற காரணத்தினால் குறைந்த மதிப்புள்ள நிலத்திற்கு அவ்வளவு தொகை கொடுக்கப்பட்டிருக்கிறது என்று குற்றம் சாட்டினார்கள்.

உடனே மாண்புமிகு தொழில் அமைச்சர் குறுக்கிட்டு, "பேசுவதற்கு முன்னால் நன்றாக விசாரித்துவிட்டுப் பேசவேண்டும். இதுபோன்ற குற்றச்சாட்டுகளை உறுப்பினர்கள் கூறும்போது, அதை எந்தமாதிரி நாம் விசாரிக்க வேண்டும் என்பதற்கான ஒரு முறையை வகுப்பதற்கு இது ஒரு வாய்ப்பாக இருக்கிறது. அரசாங்கத்திற்காக நிலம் கூடுதல் விலையில் வாங்கப்பட்டது என்பதுதான் உறுப்பினர் அவர்கள் கடைசியாகச் சொன்னது. . . . நிலம் இருப்பதை சட்டமன்றத்தில் சொல்கிறோம். அதனுடைய விலை குத்து மதிப்பாக எவ்வளவு வரும் என்று சொல்கிறோம். பின்னாலே விலை கூடுதலாகப் போகிறதா, யாரும் கூடுதல் விலைக்கு வாங்குகிறார்களா என்பதை இப்பொழுதே ஊகித்துக்கொண்டு சொல்ல முடியாது. கூடுதல் விலைக்குப் போனால் சட்டமன்றத்தில் கூடுதல் விலைக்குப் போயிற்று என்று சொல்கிறோம். . . . ஒன்று அங்கத்தினர் அதை வாபஸ் வாங்க வேண்டும். இல்லாவிட்டால் அவர்கள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும். அரசாங்கத்திற்காகக் கட்டப்படும் வீடுகளுக்காக அரசாங்கப் பணத்திலிருந்து எந்தவிதமான நில ஆர்ஜிதமும் சிங்கம்புணரியில் நடக்கவில்லை என்பது என்னுடைய வாதம். இப்படிப்பட்ட கருத்தை அவர்கள் இங்கே சொன்னதினால், அவர்கள்மீது கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டும். அவர்கள் கூறியதை சட்டசபைக் குறிப்பேட்டிலிருந்து எடுக்க வேண்டும்" என்று கேட்டுக்கொண்டார்கள்.

திரு. சித்தன் அவர்கள் இடைமறித்து, "இங்கே குற்றம் சாட்டுகிறேன் என்றால் சில விவரங்கள் கொடுக்கப்பட்டு இருக்கின்றன. சில விளக்கங்கள் கொடுக்கப்பட்டு இருக்கின்றன. அவற்றின் அடிப்படையிலேதான் குற்றச்சாட்டுகளைக் கூறுகிறேன்" என்றார்கள்.